Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 5, No.1, 2024, (63-69)

# Improve the skills of 1st grade students in presenting ideas sequentially through approaches Peer Teaching

# ‘Peer Teaching’ அணுகுமுறையின் வழி படிவம் 1 மாணவர்களிடையே கருத்துகளை நிரல் படக் கூறும் ஆற்றலை மேம்படுத்துதல்

**Suchita Murugan & Franklin Thambi Jose Selistus Darling**

Faculty of Languages and Communication
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia
e-mail: suchitamurugan23@gmail.com, thambi@fbk.upsi.edu.my

**Published:** 30 April 2024

**To cite this article (APA):** Murugan, S., & Selistus Darling, F. T. J. (2024). ‘Peer Teaching’ அணுகுமுறையின் வழி படிவம் 1 மாணவர்களிடையே கருத்துகளை நிரல் படக் கூறும் ஆற்றலை மேம்படுத்துதல்: Improve the skills of 1st grade students in presenting ideas sequentially through approaches Peer Teaching. *Journal of Valartamil*, *5*(1), 63-69. https://doi.org/10.37134/jvt.vol5.1.9.2024

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol5.1.9.2024

**Abstract:** This study was conducted to identify the problem of presenting ideas sequentially faced by Form 1 students as well as improving the skills of presenting ideas sequentially through the Peer Teaching approach. This research was conducted using a mixed approach, with quantitative and qualitative data collected from 15 Form 1 students and 3 teachers from Sekolah Menengah Kebangsaan Seri Sepang, Selangor. Instruments used to collect data include pre-tests, post-activity tests, interviews, and observations. After the initial test, the researcher implemented 4 activities namely Word Treasure Hunt, Snake & Ladder, Picture Connection, Mystery Words and Bingo to improve the oral skills of the students. The results of this study found that the Peer Teaching approach can be used to improve speaking skills. Through this, the skill of presenting ideas sequentially among students is improved.

**Keyword:** Peer Teaching, Tingkatan 1 dan 3, Word Treasure Hunt, Snake & Ladder, Picture Connection, Mystery Words, Bingo

**சுருக்கம்:** படிவம் 1 மாணவர்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் யோசனைகளை முன்வைப்பதில் உள்ள சிக்கலைக் கண்டறிவதற்காகவும் அதே போல் சக கற்பித்தல் அணுகுமுறையின் மூலம் யோசனைகளை வரிசையாக முன்வைக்கும் திறன்களை மேம்படுத்தவும் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. சிலாங்கூரில் உள்ள செகோலா மெனெங்கா கெபாங்சான் செரி செபாங்கிலிருந்து 15 படிவம் 1 மாணவர்கள் மற்றும் 3 ஆசிரியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அளவு மற்றும் தரமான தரவுகளுடன், கலவையான அணுகுமுறையைப் பயன்படுத்தி இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது. தரவைச் சேகரிக்கப் பயன்படுத்தப்படும் கருவிகளில் முன்-சோதனைகள், செயல்பாடுகளுக்குப் பிந்தைய சோதனைகள், நேர்காணல்கள் மற்றும் அவதானிப்புகள் ஆகியவை அடங்கும். ஆரம்ப சோதனைக்குப் பிறகு, மாணவர்களின் வாய்மொழித் திறனை மேம்படுத்துவதற்காக வேர்ட் ட்ரெஷர் ஹன்ட், ஸ்னேக் & ஏணி, பட இணைப்பு, மர்ம வார்த்தைகள் மற்றும் பிங்கோ ஆகிய 4 செயல்பாடுகளை ஆராய்ச்சியாளர் செயல்படுத்தினார். இந்த ஆய்வின் முடிவு, பேசும் திறனை

மேம்படுத்துவதற்கு Peer Teaching அணுகுமுறையைப் பயன்படுத்தலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களிடையே கருத்துக்களை வரிசையாக முன்வைக்கும் திறன் மேம்படும்.

**முக்கிய வார்த்தை:** சக போதனை, படிவம் 1 மற்றும் 3, வார்த்தை புதையல் வேட்டை, பாம்பு & ஏணி, பட இணைப்பு, மர்ம வார்த்தைகள், பிங்கோ

## முன்னுரை

மொழித்திறன் என்பது வாசிப்பு, எழுத்து, கேட்டல், பேச்சு ஆகிய நான்கு அடிப்படைத் திறன்களை உள்ளடக்கியது. இந்நான்கு திறன்களும் ஒருங்கே சரிவர வைக்கப்பட வேண்டும் என்பது மலேசிய கல்வித்திட்டம் (1986) வலியுறுத்துகிறது. மலேசிய நாட்டின் கல்வி கொள்கையும் தேசியக் கலைத்திட்டமும் அறிவு, திறன், நெறிமுறை, பண்பு, கலாச்சாரக் கூறுகள், நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கலைத்திட்ட மற்றும் புறப்பாட நடவடிக்கைக்கான கல்வித்திட்டமாகும் (Dokumen Standard Kurikulum dan Pentaksiran Bahasa Tamil Tingkatan 1, 2015). இத்திட்டம் மாணவர்களின் உடல், ஆன்மீகம், அறிவு, உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியை முழுமையாகப் பெற்றிருக்க வகை செய்வதோடு மாணவர்களுக்கு வேண்டிய பண்புகளை விதைத்து அவற்றை மேம்படுத்தவும் அவர்கள் அறிவைப் பெறவும் வழிவகுக்கிறது.

தற்போதைய கலைத்திடத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று 21-ஆம் நூற்றாண்டிற்கான திறனும் பண்பும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதாகும். குறிப்பாகச் சிந்திப்பதிலும் வாழ்வியல் திறனிலும் தொழில் தர்மத்திலும் மேம்பாடடைந்த மாணவர்கள் உருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது வெற்றிப் பெற ஒவ்வொரு மாணவரும் கலைத்திடத்தில் வரையறுக்கப்பட்ட அனைத்து மொழி திறன்களையும் அடைந்திருப்பது மிகவும் முக்கியம்.

எனவே, ஆசிரியர் மேற்கொள்ளும் முறையான ‘Peer Teaching’ அணுகுமுறைதான் இக்கற்றல் கற்பித்தலின் மூலம் மாணவர்களிடம் முழுமையாகக் கொண்டு சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்தும். ஆக, இவ்வாய்வு அணுகுமுறையின் மூலம் படிவம் 1 மாணவர்களின் கருத்துகளை நிரல்படக் கூறும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாணவர்கள் கேட்டல் பேச்சுத் திறனை மேம்படுத்த சரியாகப் பயன்படுத்த ‘Peer Teaching’ அணுகுமுறை விளைபயன்மிக்க அணுகுமுறையாகத் திகழ்ந்தது. ஆக, இவ்வியலில் ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வின் நோக்கம், ஆய்வு வினாக்கள், ஆய்வின் நன்மை, ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரம் மற்றும் கலைச்சொற்கள் விளக்கம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

## ஆய்வுப் பின்னணி

அன்றைய காலக்கட்டத்தில் தமிழ்மொழிக்கான கலைத்திட்டம் ஓரிரு பக்கங்களில் வரையறுக்கப்பட்டிருந்தது. 1987-ஆம் ஆண்டில் இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைந்த கலைத்திட்டத்தின் (கே.பி.எஸ்.எம்) அறிமுகத்திற்குப் பின்னரே, தமிழ்மொழிக்காக ஒரு முறையான பாடத்திட்டம் உருவாக்கப்பட்டது. இப்பாடத்திட்டம் தற்காலக் கல்வியில் காணப்படும் அறிவுப்புலம், சமூகப் பண்பாட்டுக் கோட்பாடு, புதிய நூற்றாண்டிற்குத் தேவையான ஆக்கச் சிந்தனை, வாழ்நாள் கற்றல், தொழில்நுட்பம், தொடர்புத்துறைத் திறன்கள், எதிர்காலவியல் ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கிறது. 2001-ஆம் ஆண்டில் இடைநிலைப்பள்ளிகளுக்கான பாடத்திட்டம் மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. இதன் பகுப்பாய்வு முறையில் மாற்றம் இருந்தாலும், இப்பாடத்திட்டமும் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து, இலக்கணம், இலக்கியத்திற்கே முக்கியத்துவம் வழங்குகின்றன.

அதுபோல, தேசியக் கலைத்திட்டம் அறிவுறுத்தும் முக்கியமான திறன்களில் ஒன்றுதான் கேட்டல் பேச்சுத் திறன் ஆகும். கேட்டல், பேச்சுத் திறன்வழி மாணவர்கள் அன்றாட வாழ்வில் கிடைக்கபேறும் தகவல்களைச் சீர்தூக்கிப்பார்த்து, குறிப்பிட்ட துறையைச் சார்ந்த ஏடல்களைச் சூழலுக்கு ஏற்பத் தரமான மொழியில் வெளியிடுவர். வினவுவதன்வழி ஏடல், கருத்துக்கோடல் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பர்; புதிய ஏடல்களையும் கருத்துகளையும் தங்களது தேவைகளையும் தெளிவாக வெளியிடுவர். இத்திறனைக் கொண்டு மாணவர்கள் வாசித்துத் தெளிவாகப் பொருள் கூறவும் பேச்சு, உரை ஆகியவற்றை உய்த்துணரவும் திறன் பெறுவர்.

‘Peer Teaching’ அணுகுமுறை என்பது மாணவர்கள் அறிவு, திறன்கள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு ஒருவருக்கொருவர் கற்பித்து மற்றும் கற்றுக்கொள்வதே ஆகும். இரண்டு முதல் ஐந்து நபர்கள் ஒரு குழுவில் ஒன்றாக பணிபுரிவது தனிநபர்களின் செயல்திறனில் இருந்து மட்டும் கணிக்கப்படுவதை விட சிறந்த குழுவாகச் செயல்படும் செயல்திறனை அளிக்கிறது (Jonathan G. Tullis, 2020). அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்புகளை வழங்கி மாணவர்கள் தங்கள் கருத்துக்களையும் யோசனைகளையும் ஒரே நேரத்தில் பகிர்ந்து கொள்ளவதற்கு இவ்வணுகுமுறை பெரும் உதவியாக இருக்கும். அதுமட்டுமின்றி, மாணவர்களிடையே நல்ல உறவையும் மேம்படுத்த இது ஒரு சிறந்த அணுகுமுறை என்று ஆய்வாளர் கருதுகிறார். ‘Peer Teaching’ அணுகுமுறை குழு அடிப்படையிலான கற்றல் முறையில் அமைந்துள்ளதால் கற்பித்தலின் போது மாணவர்களிடையே சலிப்பைப் போக்கி பாடத்தின் மீதான அவர்களின் ஆர்வத்தையும் புரிதலையும் மேம்படுத்தி மகிழ்ச்சியான கற்றல் கற்பித்தல் சூழலினை உருவாக்கவும் முடியும்.

## ஆய்வுச் சிக்கல்

கேட்டல் பேச்சு திறன் என்பது நம் வாழ்நாள் முழுவதும் செய்யும் பெரும்பாலான செயல்பாடுகளில் இன்றியமையாததாக உள்ள திறன் ஆகும் (Zulfugarova Sabina, 2021). அவ்வகையில், தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் முதல் திறனாக இருக்கும் இக்கேட்டல் பேச்சை ஒவ்வொரு மாணவரும் அடைந்திருப்பது மிகவும் அவசியமாக இருக்கின்றது. அதுமட்டுமின்றி, கேட்டல் பேச்சுத் திறன் என்பது மாணவர்களுக்கு மற்றவர்களின் கருத்துக்களைக் கருத்தில் கொண்டு தங்களின் எண்ணங்களை வெற்றிகரமாகப் பகிர்ந்து கொள்ளும் திறனை மேம்படுத்த அனுமதிக்கும் வகையில் இருக்கக் கூடியதாகும். ஆனால், பெரும்பாலும் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் கேட்டல் பேச்சுத் திறனை அடைவதில் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அதிலும் குறிப்பாகப் படிவம் 1 சார்ந்த மாணவர்கள் கேட்டல் பேச்சுத் திறனான கருத்துகளை நிரல் படக் கூறுவதில் அதிகமான சிக்கலை எதிர்நோக்குகிறார்கள் .

இதற்குச் சான்றாக, (Hande Yılmaz, 2015) அவர்கள் தனது ஆய்வில் மாணவர்கள் அவர்கள் கேட்கும் தகவல்களை உடனடியாக நினைவில் வைத்துக் கொள்ள முடியாததால் செவிமடுக்கும் கருத்துகளை நிரல் படக் கூறுவதில் சிக்கலை எதிர்நோக்குகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். வகுப்பில் ஆசிரியர் வழங்கும் பயிற்சி அவர்களுக்குப் பற்றாக்குறையாகவும் ஒளிபரப்பும் ஒலிப்பதிவு அல்லது ஒரு தகவல்களை விரைவாகக் கூறுவதால் மாணவர்களால் உடனுக்குடன் ஒரு தகவலைக் கேட்ட பிறகு அதனை நினைவில் வைத்துக் கொண்டு மீண்டும் கூற முடியாமல் சிரமப்படுகிறார்கள். பெரும்பாலும் ஒரு வகுப்பில் முதல், இடை, கடை நிலை மாணவர்கள் என்று மூன்று நிலை அடிப்படையிலான மாணவர்கள் இருப்பார்கள். இத்தகைய மாணவர்கள் இருக்கும் போது குறிப்பாகக் கடை நிலை மாணவர்களால் உடனுக்குடன் ஒரு தகவலை நினைவில் வைத்துக் கொள்வது சிரமமாக இருக்கும். ஆக, உடனடியாக நினைவில் வைத்துக் கொள்ள முடியாததால் மாணவர்களால் அவர்கள் செவிமடுக்கும் கருத்துகளை நிரல் படக் கூறுவதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர்.

## ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வு இரண்டு நோக்கங்களை அடைவதைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. அவை :

i. படிவம் 1 மாணவர்கள் கருத்துகளை நிரல்படக் கூறுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிதல்.

ii. 'Peer Teaching' அணுகுமுறையின் மூலம் படிவம் 1 மாணவர்களுக்குக் கருத்துகளை நிரல்படக் கூறும் ஆற்றலை மேம்படுத்துதல்.

## ஆய்வு கருவி

இந்த ஆய்வை ஆய்வாளார் மேற்கொள்வதற்காகத் மூன்று ஆசிரியர்களிடம் நேர்காணலை மேற்கொள்வதற்காக 10 கேள்விகள் உள்ளடக்கிய வினா நிரல் தயார் செய்யப்பட்டது. ஆய்வாளர் தேவையான தரவுகள் யாவும் மாதிரியை அடையாளம் கண்டு, அனுமதி பெறப்பட்டப் பின்பு, வினாநிரலைக் கொண்டு ஆசிரியர்களை நேர்காணல் செய்தார். ஆய்வாளர் படிவம் 1 மாணவர்கள் கருத்துகளை நிரல் படக் கூறுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறியத் தரவுகளைச் சேகரித்தார். தொடர்ந்து, ஒரு தலைப்பை வழங்கி மாணவர்கள் அதில் இருக்கும் கருத்தை நிரல் படக் கூறுவதை ஒலிப்பதிவுச் செய்வதன் வழி தரவுகள் சேகரிக்கப்பட்டது. ஆகவே, ஆய்வாளர் இம்முறையைப் பயன்படுத்தியே இந்த ஆய்வுக்கான தரவுகளைச்சேகரித்தார்.

## வினா

வினா 1: படிவம் 1 மாணவர்கள் கருத்துகளை நிரல்படக் கூறுவதில் ஏற்படும் சிக்கல்கள் யாவை?

இவ்வாய்வின் முதலாம் நோக்கத்தை அடைய ஆய்வாளர் மாணவர்களுக்கு முன்னறித் தேர்வினை வழங்கினார். இப்பகுதியில் இவ்வாய்வின் முதலாம் நோக்கத்திற்குச் சேகரிகப்பட்ட முன்னறித் தேர்வு முடிவுகள் விளக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் முதல் நோக்கமானது முதலாம் படிவ மாணவர்களிடையே கருத்துகளை நிரல் படக் கூறுவதில் ஏற்படும் சிக்கல்களைக் கண்டறிதல் ஆகும். படிவம் 1 மாணவர்களின் பாடத்திட்டத்தில் கருத்துகளை நிரல் படக் கூறுதல் என்ற கற்றல் தரம் இருப்பதால் ஆய்வாளர் இத்திறனை மாணவர்கள் அடைந்திருந்த நிலையைத் தெரிந்து கொள்ள முதலில் ஆசிரியர்களை நேர்காணல் செய்தலும், பின்னர் மாணவர்களுக்குத் தலைப்பு ஒன்றினை வழங்கி அவர்களைப் பேச வைத்தலும் முன்னறித் தேர்வாக அமைந்திருந்தது.

4.3.1 நேர்காணல்

படிவம் 1 மாணவர்கள் கருத்துகளை நிரல்படக் கூறுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிதல் எனும் முதல் நோக்கத்திற்கு ஆய்வாளர் மூன்று ஆசிரியர்களை நேர்காணல் செய்தார். கருத்துகளை நிரல் படக் கூறும் ஆற்றலில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் யாவும் மூன்று ஆசிரியர்களின் நேர்காணலின் மூலம் கண்டறியப்பட்டது.

மாணவர்கள் கருத்துகளை நிரல் படக் கூறுவதில் பல சிக்கல்களைக் கொண்டுள்ளனர் என்பதை இந்நேர்காணலின் மூலம் தெரிய வருகிறது. முதலாவதாக, மாணவர்கள் கருத்துகளை நிரல் படக் கூறுவதில் சிரமப்படுகிறார்களா என்று ஆசிரியர்களைக் கேட்கும் போது, மூன்று ஆசிரியர்களும் மாணவர்கள் சிக்கலை எதிர்நோக்குகிறார்கள் என்றே குறிப்பிட்டனர். தொடர்ந்து, கற்பித்தல் முறைகள் மாணவர்களின் புரிதலுக்கு ஏற்றவாறு உள்ளதா என்ற கேட்டபோது, ஆசிரியர் 1 கற்பித்தல் முறைகள் பொதுவாக நல்லது என்றாலும், சிலர் தனிப்பட்ட முறையில் விரும்புகின்றனர் என்றும், ஆசிரியர் 2 கற்பித்தல் முறைகள் சில நேரங்களில் மாறுபட்ட பின்புலத்தை கொண்டவர்களுக்குப் பொருந்தவில்லை என்றும் ஆசிரியர் 3, கற்றல் முறைகள் சில மாணவர்களுக்குச் சரியாக அமையாததால் அவர்களின் வளர்ச்சியில் சிரமம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டனர்.

இறுதியாக, தன்னம்பிக்கையின்மை காரணமாக மாணவர்கள் பின்தங்குகிறார்களா என்று கேட்ட போது, தன்னம்பிக்கை குறைவால் மாணவர்கள் சில சமயங்களில் பின்தங்குகிறார்கள் என்றும் தன்னம்பிக்கை குறைவால் புதிய முயற்சிகளை மேற்கொள்ள வெறுமனே தவறுகிறார்கள் என்று கூறினர். ஆக, இந்நேர்காணலின் மூலம் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் மூலம் மாணவர்கள் கருத்துகளை நிரல் படக் கூறுவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள் கண்டறியப்படன.

## முடிவு

இந்த ஆய்வின் முடிவின் மூலமாக ஆய்வாளரின் இரண்டு நோக்கங்களும் வெற்றிகரமாக அடைந்துள்ளது என்பதைக் காண முடிகின்றது. மாணவர்கள் முன்னறித் தேர்வைக் காட்டிலும் பின்னறித் தேர்வில் பெற்ற அடைவுநிலை அதிகமாக இருப்பதே இதற்குத் தக்க சான்றாக அமைகின்றது. ஆகவே, இன்றைய 21-ஆம் நூற்றாண்டு காலக்கட்டத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் பாட புத்தகங்களை மட்டும் பயன்படுத்தி பாடங்களை போதிக்காமல் தொழில்நுட்பத்தின் துணையுடன் விளையாட்டு அணுகுமுறையைக் கையாண்டு போதிக்கலாம்.

மாணவர்கள் வகுப்பில் சலிப்புத் தட்டிவிடாமல் ஆர்வமாகவும் மகிழ்ச்சியாகவும் கற்றல் கற்பித்தலில் ஈடுப்பட ஆசிரியர் peer teaching போன்ற அணுகுமுறையைப் பயன்படுத்தலாம். இதன் மூலம், வகுப்பில் மாணவர்களின் ஈடுப்பாட்டையும் அதிகரிக்க முடியும். மாணவர்கள் முழு ஈடுப்பாட்டுடன் கற்றல் கற்பித்தலைக் கவனிக்கும் போது அவர்களால் அன்றையப் பாடத்தையும் புரிந்து கொள்ள முடியும். ஆதலால், ஆசிரியர்கள் இதுபோன்ற பல கோட்பாடுகளையும் அணுகுமுறைகளையும் கையாள தெரிந்து கொள்ள வேண்டும். இந்த ஆய்வு அனைவரின் ஒத்துழைப்புடன் எதிர்பார்த்தபடியே சிறப்பாக நடத்தப்பட உறுதுணையாக இருந்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் ஆய்வாளர் தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார்.

**References**

Hande Yılmaz, Fatih Yavuz (2015). The Problems Young Learners Encounter During Listening Skills. Procedia - Social and Behavioral Sciences 197 (2015) 2046–2050 https://doi.org/10.1016/j.sbspro.2015.07.570

Asroriyah, A. M., Wijayanto, R., Firharmawan, H., & Heriyanto, D. (2024). The Problem Faced by PBG Students in the Third Semester in Listening Skill at Universitas Ma’arif Nahdlatul Ulama. English Education and Literature Journal (E-Jou), 4(01), 47-53. https://doi.org/10.53863/ejou.v4i01.1083